இலவச காலாண்டு சமய இதழ்

# அகர தீபம்

www.akaram.eu

14.07.2018 - 13.10.2018

FREE MAGAZINE

## திருவனந்தபுரம் பத்மநாதசுவாமி

## மர்மங்கள் நிறைந்த வைணவதலம்

மாலை : 05 மலர் : 02

திருவள்ளுவர் ஆண்டு 2049

# துணைவாயில்..

**அகரதீபம்**
**வாசகஅன்பர்களுக்கும்**
**ஆன்மீகவாதிகளுக்கும்**
**வணக்கம்.**

அண்மையில் தமிழ் ஈழம் வரணி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழாவின் பொழுது சாதி வெறியும் தீண்டாமையும் தலை விரித்தாடிய அசிங்கத்தை உலகம் மீண்டும் கண்டுகொண்டது.

உள்ளாட்சி தேர்தல் வேட்பாளர்கள் தெரிவிலும் தமிழரசுக் கட்சித் தலைமை சாதிவெறியை கடைப் பிடித்தது என்ற செய்தியும் வெளியானது. ஒரு இன அழிப்பை உலக அரசுகளால் நடத்தப்பட்ட இனமாக நமது இனம் உள்ளது.

எமது நியாயமான அரசியல் குரலை பயங்கரவாதம் எனப் பொய்யாகப் பட்டியலிட்டு அழித்த அதே அந்நிய அரசுகள் எமது இனத்தின் கடல் தரை வளங்களை கூறு போட்டு கொள்ளை அடித்துப் போகின்றன. அவற்றுக்கு சட்டப் படியான வரலாற்று சொந்தக்காரர்கள் காடுகளிலும் வெட்டவெளிகளிலும் வேலையும் வருவாயும் இழந்து தவிக்கும் நிலைதான் பத்து வருடங்கள் கழிந்தும் நீடிக்கிறது.

இந்நிலையில் தமிழரின் தேசப் பற்றும் தேசிய உணர்வும் பலப் படுத்தப் படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ள நிலையில் இத்தகைய சாதிப் பிரிவினையும் தீண்டாமையும் மீளத் தலை தூக்குவது மிக ஆபத்தான விடயமாகப் பார்க்கப்பட வேண்டிய கட்டாயத்தை நமது இனம் புரிந்து தன்னை திருத்திக் கொள்வது அவசியமாகிறது.

இந்தவிடயத்தை தமிழரின் சமூகநல ஆர்வலர்கள் தேசிய எழுச்சியை மீளக் கட்டி எழுப்பி வரும் நிலையில் அதனை மழுங்கடித்து அழித்து விட இலங்கை இந்திய அரசுகளின் திட்டமிட்ட சதிச்செயலாக இருக்கும் வாய்ப்புகளே அதிகமாகக் காணப்படுகிறது.

நடத்தி முடிக்கப்பட்ட தமிழ் இன அழிப்பு தொடர்பான எந்தவித நேர்மையான நீதி விசாரணையும் நடத்தப்படாத நிலையில் அத்தகைய விசாரணை எதுவும் நடத்தப்படக் கூடாது என இலங்கை இந்திய அரசுகள் முனைப்புடன் செயற் படும் நிலையில் நமது அரசியல் சிந்தனையாளர்களும் செயற்பாட்டாளர்களும் மிக எச்சரிக்கையுடனும் துணிச்சலுடனும் எம் இனத்திடையே பிளவுகளை ஏற்படுத்தும் எவரையும் வலுவாக எதிர்க்கத் தயங்கக் கூடாது என்பதே எம் இனத்தை காப்பாற்ற தேவையான நடவடிக்கை ஆகும்.

ஆலயங்களும் அவற்றை நிர்வகிக்கும் தாளாளர்களும் எமது இனத்துக்கான தார்மீகக் கடமைகளை மறக்காமல் ஆற்ற முன் வரவேண்டும் என்ற அழைப்பை விடுத்து விடைபெறும்.

அகரதீபம் ஆசிரியர் குழு.

# சீனாவில் பழந்தமிழர் கட்டிய கோயில்

சீனாவில் எழுப்பப்பட்ட சிவன் கோயில் சீனசக்கரவர்த்தியான குப்லாய் கானின் ஆணையின் கீழ்கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டின் கடைசி வரிகள் சீன எழுத்தில் பெரிக்கப் பட்டுள்ளன. சீனநாட்டில் காண்டன் எனும் நகருக்கு 500 கல் வடக்கே உள்ள சூவன்சௌ என்னும் துறைமுகநகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் வணிகக் கப்பல்கள் தாய்லாந்து சென்று அதன்மேற்குக் கரையோரமாக உள்ள சில துறைமுகங்களிலும் தங்கிப் பிறகு வியத்துநாம் சென்று அங்கிருந்து சீனநாட்டை அடைந்துள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து நேரடியாகச் சீனாவிற்குக் கடல் வழியாகச் செல்ல வேண்டுமானால் வங்காள விரிகுடாவைக் கடந்து உள்ள மாலக்கா வழியாகத் தென் சீனக்கடலை அடையலாம். மலேசியத் தீபகற்பத்தைச் சுற்றி இவர்கள் செல்ல வேண்டியிருக்கும். ஆனால் இந்த வழி சுற்று வழியாகும். ஆயிரம கல்களுக்கு அதிகமாகப் பயணத் தொலைவு நீளும். மேலும் பயண நேரத்திலும் பல மாதம் கூடிவிடும்.

சீனாவில் தமிழர்கள் காண்டன் நகரில் மட்டுமன்று. வேறு சில இடங்களிலும் வணிகக் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். பிற்காலச் சோழர் காலத்தில், புகழ்பெற்ற வணிகக் குலாமான திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் எனும் குழுவினர் சீனநாட்டின் பல்வேறு பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

## குப்லாய்கான்

சூவன்லி சௌ துறைமுகநகரில் சிவாலயம் ஒன்று உள்ளது. இந்த ஆலயத்தில் நிறுவப்பெற்றுள்ள சில விக்கிரகம் குப்லாய்கான் என்னும் புகழ்ப்பெற்ற சீனச் சக்கரவர்த்தியின்

ஆணையால் அமைக்கப்பட்டதாகும். இவருக்குச் சேகாசைகான் என்ற பெயரும் உண்டு. இவரின் உடல் நலத்திற்காக இந்த ஆலயம் எழுப்பப்பட்டது. இந்தக் கோயில் திருக்கதாலீசுவரம் என வழங்கப் பட்டது. இந்த ஆலயத்தில் உள்ள சிவன் திருக்கதாலீசுவரன் உதய நாயனார் என அழைக்கப்பட்டார்.

சீனச் சக்கரவர்த்தியின் இந்த ஆணையை நிறைவேற்றியவரின் பெயர் தவச்சக்கரவர்த்திகள் சம்பந்தப் பெருமாள் என்பதாகும். சகயுகம் சித்திராபவுர்ணமி அன்று இந்த ஆலயம் நிறுவப்பட்டது. கி.பி 1260ம் ஆண்டு குப்லாய்கான் முடிசூடினான். இவன் உலகையே நடுங்க வைத்த மங்கோலியச் சக்கரவர்த்தியான செங்கிசுகானின் பேரனாவான்.





மங்கோலியச் சக்கரவர்த்திகள் ஆளுகையில் சீனாவும் இருந்தது.

இவன்தான் பெய்சிங் நகரைக் கட்டி அதைத் தனது பேரரசின் தலைநகராக்கினான். அவருடைய பேரரசு விரிந்து பரந்திருந்தது. வுலிமை வாய்ந்த சக்கரவர்த்தியாக அவன் திகழ்ந்தான் புகழ் பெற்றயுவான் அரசமரபை இவனே தொடங்கிய வனாவான். தமிழ்நாட்டில் பிற்காலப் பாண்டியப் பேரரசு அரசோச்சிய காலத்தில் இவன் சீனப்பேரரசின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான்.

பாண்டிய அரசகுல மும்குப்லாய் கானும் மிகுந்த நட்புறவுடன் திகழ்ந்தனர். அப்போ திருந்த பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் ஆவான். இரு நாடுகளுக்கிடையேயும் தூதர்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது. சீனாவில் எழுப்பப்பட்ட இந்த சிவன் கோயில் சீனசக்கரவர்த்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ்கட்டப் பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு இக்கோவிலில் உள்ளது.

இக்கல்வெட்டின் கடைசி வரிகள் சீன எழுத்தில் பெரிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலில் சோழர் காலச் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு வெளியே கண்டு பிடிக்கப்பட்ட மிக அபூர்வமான தமிழ்க் கல்வெட்டு இதுவாகும்.

# துர்வாச முனிவரை துரத்திய சக்ராயுதம்

அம்பரீஷன் என்ற மன்னன், அனுதினமும் மகாவிஷ்ணுவின் நினைவிலேயே இருந்து வந்தான். இறைவனின் கீர்த்தனைகளைக் கேட்பதிலும், அவன் நாமங்களைச் சொல்வதிலும் அவன் கவனம் இருந்தது. நாட்டை ஆள்வதில் அதிகமாக கவனம் செலுத்தவில்லை.

மன்னனின் பக்தியை உணர்ந்த மகாவிஷ்ணு, நம் மீதுள்ள பக்தியால் மன்னன் நாட்டையும், நாட்டு மக்களையும் கவனிக்கத் தவறிவிடுகிறானே என்ற எண்ணம் கொண்டார். மன்னன் இப்படியே தொடர்ந்தால், நாட்டின் நிலை மோசமாகிவிடும் என்பதற்காக, தன்னுடைய சுதர்சன சக்ரத்தையே, மன்னனின் அரண்மனையில் வைத்துவிட்டார் திருமால். அந்த சக்கரத்தின் சக்தியால் நாட்டில் எந்த பிரச்சினையும் இல்லை.

மன்னனும் இறைவனின் நாமத்தைப் பாடுவதிலேயே கவனம் செலுத்தத் தொடங்கினான். ஒரு முறை ஏகாதசி விரதம் இருக்க முடிவு செய்தான் அம்பரீஷன். யமுனை நதிக்கரையோரம் ஒரு குடில் அமைத்து, அங்கேயே ஓராண்டு காலம் இருந்து ஏகாதசி விரதத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தான். அதன்படி ஓராண்டு காலம், ஒவ்வொரு மாதமும் வரும் ஏகாதசிகளில் விரதம் அனுஷ்டித்து

வந்தான்.

அந்த வருஷத்தின் கடைசி ஏகாதசி வந்தது. வழக்கம்போல் எல்லோருக்கும் போஜனம் செய்வித்து தானங்களை வழங்கி முடித்தான் அம்பரீஷன். அவனும் அவனுடைய மனைவியும் சாப்பிடவேண்டும். அந்த நேரத்தில் துர்வாச முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். அவரை வணங்கிய அம்பரீஷன், 'முனிவரே! தாங்கள் உணவருந்தி, எங்களுக்கும் பிரசாதத்தை வழங்க வேண்டும்' என்றான்.

துர்வாசரோ, 'நீராடி விட்டு வருகிறேன்' என்று எழுந்து நடக்கத் தொடங்கினார். ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கு அரை நாழிகைதான் மீதம் இருக்கிறது. ஆனால் துர்வாசரோ, வேண்டுமென்றே மெதுவாக நடந்து சென்று அம்பரீஷனை சோதித்தார்.

ஏகாதசி விரத காலம் முடியும் நிலை வந்து விட்டது. ஆனாலும் நீராடச் சென்ற துர்வாச முனிவரைக் காணவில்லை. காலம் கடந்து விட்டால், ஓராண்டு காலமாக கடைப்பிடித்து வந்த விரதம் அனைத்தும் வீண் என்று உணர்ந்த அம்பரீஷன், இதுபற்றி அங்கிருந்து பெரியவர்களிடம் கேட்டான்.

'நீரில் ஒரு துளசி இலையை போட்டு, உட்கொள்ளுங்கள். அது சாப்பிட்ட மாதிரியும் கணக்கு சாப்பிடாத மாதிரியும் கணக்கு. எனவே துவாதசி முடிவதற்குள் இதனை செய்யுங்கள்' என்றனர். அம்பரீஷனும் அப்படியேச் செய்தான். ஆனால் அவன் துளசியை சாப்பிட்டது துர்வாசருக்குத் தெரிந்து விட்டது.

'என்னுடன் அமர்ந்து உணவருந்துவதாகச் சொல்லிவிட்டு, இப்போது என்ன செய்திருக்கிறாய்? உனக்கு எவ்வளவு அகங்காரம்?' என்றவர், தன் ஜடா முடியில் இருந்து ஒரு முடியை எடுத்துப் போட்டார். அதில் இருந்து புறப்பட்ட பூதம், அம்பரீஷனையும், அவனது குடும்பத்தையும் அழிக்க முற்பட்டது.

ஆனால் அம்பரீஷனின் பூஜை அறையில் இருந்த சுதர்சன சக்கரம் அங்கு வந்து, பூதத்தை வதம் செய்தது. பின்னர் அது துர்வாசரின் பக்கம் திரும்ப, அவர் தன்னை காத்துக் கொள்ள ஒவ்வொரு இடமாக ஓடி ஒளிந்தார். முதலில் பிரம்மனிடமும், பின்னர் சிவனிடமும் சென்று தஞ்சம் அடைந்தார். ஆனால் அவர்கள் இருவரும் கைவிரித்து விட, சுதர்சன சக்கரத்தை கையில் வைத்திருக்கும் திருமாலிடம் சென்றார்.

திருமாலோ,'துர்வாசரே! என் பக்தர்கள்தான் என்னுடைய எஜமானர்கள். அவர்களுக்குப் பிரச்சினை என்றால், அவர்களுக்காக நான் எதையும் செய்வேன். நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றால், அம்பரீஷனையே சரணடையுங்கள்' என்று சொல்லிவிட்டார்.

வேறு வழியில்லாமல் துர்வாசரும், அம்பரீஷனிடம் வந்தார். அதன் பிறகே சுதர்சனச் சக்கரம் தன்னுடைய ஆக்ரோஷ நிலையை கைவிட்டது. அம்பரீஷனின் இந்த உயரிய நிலைக்கு, அவனது ஏகாதசி விரதமே காரணம்.

# இரணைமடு ஸ்ரீகனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் இவீணைமடு தீர்த்தத் தேக்கினை தீர்த்தமாகக் கொண்டு அதனுடைய இடது கரையில் அமைந்துள்ளது இரணைமடு திருவருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில். இங்கு அன்னை பராசக்தி வலது கரத்தில் கிளியினை ஏந்தியபடி நிற்கும் திருக்கோலத்தில் ஸ்ரீ கனகாம்பிகை என்னும் பெயர் தாங்கி மூலவராக உள்ளார்.

1950களில் கிளிநொச்சி என்றொரு மாவட்டமே இல்லை! அப்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சி நகரம் மிகக் குறுகிய நகரமாகவே இருந்தது. அதன் மையப்பகுதியில்தான் முக்கியமான பாடசாலை, பொலீஸ் நிலையம், சந்தை, கந்தசாமி கோவில், சினிமா திரையரங்கங்கள் என பலவும் இருந்தன. அதனைச் சுற்றியுள்ள பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் காடுகளாகவே இருந்தன!.

50களுக்குப் பின்னர் அரசாங்கத்தினால் கிளிநொச்சியில் பல குடியேற்றங்கள் அமைக்கப்பட்டனன. வெறுங் குடியேற்றங்கள் மட்டுமாக

இல்லாமல் குடியேறியவர்களின் வாழ்வாதாரங்களை மையமாகக் கொண்டு காடுகள் அழிக்கப்பட்டு அவை வயல் நிலங்களாக உருவாக்கப்பட்டது. அவையாவன முதலாம் வாய்க்கால் இரண்டாம் வாய்க்கால் மூன்றாம் வாய்க்கால் என பெயர்கள் சூட்டப்பட்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளில் இருந்தே ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து இக் குடியேற்றத் திட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். அப்படிக் குடியேறியவர்கள் தங்கள் தங்கள் வசதிக் கேற்ப தங்கள் குடியிருப்புக்களைச் சுற்றி தங்கள் வசதிக் கேற்ப காய் கறித் தோட்டங்களையும், சிறிய ஆலயங்களையும் அமைத்துக் கொண்டார்கள். இப்படியான நேரத்தில் அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த 'யோகர் சுவாமிகள" அவர்கள் 'உங்கள் வாழ்விற்கு அன்னை பராசக்தி அவர்கள் ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் வடிவில் வருவாள்" என அருள்வாக்கு கூறினாராம்.

சுவாமிகளின் அருவாக்கிற்கமைய அவருடைய ஆலோசனைகளையும் பெற்று அங்கு வாழ்ந்த பெரியோர்கள் சிலர் எடுத்த முயற்சியின் காரணமாக 1957ம் ஆண்டு இரணைமடு குளத்தின் இடது கரையில் சுமார் பதின்மூன்றரை ஏக்கர் காணியில் ஒரு வேப்ப மரத்தின் கீழ் சிறு குடிசையாக அமைக்கப் பட்டதுதான் திருவருள் ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் ஆகும். (தற்பொழுது ஒன்பது ஏக்கர் காணி மட்டுமே கோவில் நிர்வாகத்திடம் உள்ளதாகவும் மிகுதி நான்கரை ஏக்கர் காணியும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அறியமுடிகின்றது.)

சிறு குடிசையில் குடியேறிய ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவாக்கம் பெற்று பெரிய ஆலயமாக மாற்றமடைந்து சிறியதான கோபுரமும் அமைக்கப்பட்டு குடமுழுக்கு பெறுமளவிற்கு விருத்தியடைந்தது. இதன் முதலாவது குடமுழுக்கு 1960 ம் ஆண்டு நடைபெற்றது. தொடர்ச்சியாக 1981ல் இரண்டாவது குடமுழுக்கும் 1996ல் மூன்றாவது குடமுழுக்கும் 2012 சனவரி முப்பதாம் திகதியன் நான்காவது குடமுழுக்கும் நடைபெற்றன.

**தேர்...**

வன்னிப் பிரதேசத்திலேயே சித்திரைத்தேர் ஓடிய முதல் ஆலயம் என்ற பெருமையும் மூன்று சித்திரத் தேர்கள் ஓடும் முதல் ஆலயம் என்ற பெருமையோடு

மிகப் பெரிய தேர் உள்ள ஆலயம் என்னும் பெருமையும் இவ் ஆலயத்திற்கு உண்டு. இந்தத் தேர்கள் மூன்றும் கைதேர்ந்த சிற்பிகால் வடிவமைக்கப்பட்டு முதன் முறையாக 1989ம் ஆண்டு நடைபெற்ற மகோற்சவத்தின்போது வெள்ளோட்டம் விடப்பபட்டன.

## மகோற்சவம்...

வருடாந்த பெருந்திருவிழா எனச் சொல்லப்படும் அம்பாள் ஆலய மகோற்சவமானது ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் வரும் பூரணை தினமான சித்திராப் பௌரணமி பத்தாவது நாள் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டாடுமுகாக அமைந்திருக்கும். பூங்காவனத் திருவிழாவுடன் பதினொரு நாட்கள நடைபெறும். இதில் கொடியேற்றத் திருவிழா, வேட்டைத் திருவிழாவன்று சப்பறமும் தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

இதில் எட்டாம் நாள் பகல் உற்சவம் முடிவடைந்ததும் அம்பாளின் வேட்டைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான வாழை வெட்டும் நிகழ்விற்காக திருவையாறு இரண்டாம் பகுதி விநாயகர் ஆலயத்திற்கு எழுந்தருளி அங்கு வாழை வெட்டும் உற்சவம் நடைபெறும். அதன்பின் அம்பாள் திரும்பியவுடன் பிரசித்தமான அபிசேகமும் நடைபெறும். இரவு பூசையின் பின் அழகிய முத்துச் சப்பறத்தில் அம்பாள் சுப்பிரமணியசாமி விநாயகர் சமேதராய் வெளிவீதி வலம் வருவார்.

## தேர்த் திருவிழா

தேர் உற்சவமானது ஒன்பதாவதுநாள் காலையில் இடம்பெறும். காலை வசந்த மண்டபப் பூசைகள் முடிவடைந்த பின்னர் அம்பிகை, சுப்பிரமணியர், விநாயகர் சமேதரமாய் தேரில் ஆரோகணிப்பார். முதலில் விநாயகரின் தேரும், அடுத்து சுப்பிரமணியரின் தேரும், அதனையடுத்து அன்னையின் தேரும் வீதிவலம்வரும். தெரில் இருந்து பச்சை சாத்தி உற்சவ மூர்த்திகள் இறக்கப்பட்டு நவசக்தி அர்ச்சனை இடம்பெறும். இரவு தேரடி பார்க்கும் உற்சவம் இடம்பெறும்.

## தீர்த்தம்

பத்தாம் நாள் தீர்த்தம் காலையில் அம்பிகை, சுப்பிரமணியர், விநாயகர் சமேதராய் தீர்த்தமாடுவதற்காக இரணைமடு குளத்திற்கு எழுந்தருளி அங்கு தீர்த்ததிருவிழா இடம்பெறும். அன்றிரவு கொடியிறக்கம் இடம்பெறும். பதினோராம் நாள் பூங்கவனத் திருவிழா அன்று பகல் சங்காபிசேகம் இடம்பெறும். அன்றிரவு அலங்கரிக்கப்பட்ட பந்தலில்

அம்பிகை திருவூஞ்சல் ஆடும் நிகழ்வு இடம்பெற்று மலர்களால் அலங்கரிக்கப் பட்ட பூத்தண்டிகையில் அம்பிகை, சுப்பிரமணியர், விநாயகர், சமேதரமாய் வெளிவீதி வலம் வருவார்.

### வருடாந்த திருவூர்வலம்

இது வருடம்தோறும் பங்குனி மாதத்தில் இரமடு குளத்தில் இருந்து நீர் பாயும் கிராமங்களுக்கும் ஆலயத்தின் அயற் கிராமங்களுக்கும் அம்மபாள் உலா போகும் நிகழ்வாகும். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் இத் திருவூர்வலமானது ஆரம்பத்தில் ஏழு நாட்களும், பின்னர் பத்து நாட்களும், இப்பொழுது பன்னிரண்டு நாட்களுமாக நடைபெறுகின்றது.

### சிறப்பு உற்சவங்கள்

ஆலய மகோற்சவ திருவிழாக்கள் தவிர வேறு பல விழாக்களும் இங்கு சிறப்பாக கொண்டாடப் படுவதுண்டு. சித்திரை வருடப்பிறப்பு, மானம்பூ போன்ற திருவிழாக்களுடன் தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆவணி சதுர்த்தி, நவராத்திரி, விஜயதசமி, கேதார கௌரி விரதம், திருவெம்பாவை போன்றவை சிறப்பாக நடைபெறும் திருவிழாக்களாகும்.

அதே நேரம் நவராத்திரியின் 9ம் நாளன்று மகி'லீ சூரன் போரும் சிறப்பாக இடம்பெறும். இந்நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் ஆலயத்தில் மட்டுமே இடம்பெறுவது குறிப்பிடத் தக்கதாகும். அத்துடன் சமயத்துறவர் நால்வரது குருபூசை தினங்களும், ஆலய கும்பாபிகேச திகதியில் சங்காபிகேசம், ஆடிச் செவ்வாய், கடைசிச் செவ்வாயில் யாகம் போன்றவையும் சிறப்பாக நடைபெறும்.

### அமைப்பு

இவ்வாலயமானது ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் கருவறையில் மூலவர் வீற்றிருக்கின்றார். கருவறையைத் தொடர்ந்து அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபா மண்டபமும் உண்டு. சபா

மண்டபத்தில் நடராஜர் சந்நிதியும், ஸ்தம்ப மண்டபம் ஆகியவையும் காணப்படுகின்றன.

உள்பிரகாரத்தில் கருவறைக்கு வலது பக்க மூலையில் கிழக்கு நோக்கியவாறு சந்நிதியும், இடது பக்க மூலையில் வள்ளி தெய்வானை சமேத சந்நிதியும் அமைந்துள்ளது. தெற்கு வாயிலுக்கு அருகில் சந்நிதியும், கருவறை கோமுகைக்கு அருகில் தெற்கு நோக்கி சண்டேஸ்வரி சந்நிதியும், தம்ப மண்டபத்திற்குக் கிட்டவாக நவக்கிரக சந்நிதியும், தெற்கு அதனையடுத்து மூன்று தள விமானத்தையுடைய வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. இதேவேளை ஆலய பிரதான வாயிலுக்கு வலப்புறம் (வெளியிலிருந்து வரும்போது) மணிக் கோபுரமும் அடனையடுத்து வைரவர், நாகதம்பிரான் சந்நிதியும், அதனையடுத்து யாகசாலையும் அமைந்துள்ளது.

இதனைவிட உள்பிரகாரத்தில் அலுவலகம், மடைப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை போன்றனவும் அமைந்துள்ளன. வடக்குப் பகுதியில் உள்பிரகாரத்திற்கும் வெளிப் பிரகாரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அழகிய நந்தவனமும் அமைந்துள்ளது. இதேவேளை கூரை போடப்பட்ட உள் வீதியும் விசாலமான வெளி வீதியும் அமைந்துள்ளது.

திருவிழாக் காலங்களில் மட்டுமல்ல அலயத்தில் நடைபெறும் அனைத்துச் சிறப்பு பூசைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அம்பாளின் தரிசனத்திற்காக வருகை தருவார்கள். இவ் ஆலயம் கிளிநொச்சி மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கின்றது என்றால் மிகையில்லை.


## ஆலயங்களுக்கான அறிவித்தல்!

'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும்,
ஆலயங்களுக்கான விளம்பரங்களைப்
பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

00 49 23 81 98 77 897
00 49 176 47 11 87 11

# மீனும் தேனும்

ராமன் காட்டுக்கு வந்ததும் முதலில் அவரைச் சந்தித்தது குகன். வேடனான குகனும், அரச குமாரரான ராமனும் முதல் சந்திப்பிலேயே ஆத்மார்த்தமான உறவு கொண்டார்கள். அந்தச் சந்திப்பின்போது குகன் தேனையும், மீனையும் ராமனுக்குக் கொடுத்தான்.

ராமன் கிளம்பிச் சென்ற பிறகு பிறர் குகனிடம் இதைப் பற்றி விசாரித்தார்கள்

"ராஜகுமாரனான ராமருக்கு நீ மீனையும், தேனையும் கொடுத்ததில் என்ன பெருமை? எத்தனையோ உயர்ந்த விருந்தை உண்டவராயிறே ராமர்?" என்று கேட்டார்கள்.

அதற்குக் குகன், "நான் கொடுத்த இந்தப் பொருட்களில் மற்றவர்களுக்குப் புரியாத உட்பொருள் உண்டு. அதைப் புரிந்து ஏற்றுக்கொண்டார் ராமர்" என்றான்.

"என்ன?" என்று மற்றவர்கள் கேட்க,

"தேன் உயர்ந்த மலையில் உள்ள மரத்தின் உச்சியில் கிடைப்பது. மீன் கடலின் ஆழத்தில் கிடைப்பது. எங்கள் நட்பு கடலின் ஆழம் போன்று இதய ஆழத்தில் இடம் பெற்றால் அது மலையைப் போல் உயர்ந்ததாக இருக்கும் என்பதே உட்பொருள்" என்று குகன் கூறினான்.

இதைவிட ஆழமில்லை என்றும், இதைவிட உயர்ந்ததில்லை என்றும் போற்றும்படி அமைவது நட்பு என்பதைக் கம்பன் குகனையும் ராமனையும் வைத்துக் காட்டுகிறார்.

# சபரிமலை 18 படிக்கட்டுகளும் அதன் மகத்துவம்

**முதல் படி :** பிறப்பு நிலையற்றது. நாம் செய்யும் நல்லவையும் கெட்டவையுமே நம் பாவ புண்ணியங்களை நிர்ணயிக்கும் என்று ஒவ்வொருவரும் உணர வேண்டும். இறைவன் திருவருளால் முக்தி பெற வேண்டும் என்ற ஆத்ம துடிப்பே விஷாத யோகம். இதுவே முதல்படி.

**இரண்டாம் படி :** பரமாத்மாவே என் குரு என உணர்ந்து அவரிடம் ஆத்ம உபதேசம் பெறுவது சாக்கிய யோகம்.

**மூன்றாம் படி :** கர்மயோகம் உபதேசம் பெற்றால் மட்டும் போதுமா? மனம் பக்குவம் அடைய வேண்டாமா? பலனை எதிர்பாராமல் கடமையை செய்யும் பக்குவம் கர்ம யோகம்.

**நான்காம் படி :** பாவ - புண்ணியங்கள் பற்றிக்கூட கவலைப்படாமல் எதன் மீதும் பற்றில்லாமல் பரமனை அடையும் வழியில் முன்னேறுவது ஞானகர்ம சன்னியாச யோகம் ஆகும்.

**ஐந்தாம் படி :** நான் உயர்ந்தவன் என்ற ஆணவம் இல்லாமல் தான தர்மங்கள் செய்வது ஐந்தாம்படி.

**ஆறாம் படி :** கடவுளை அடைய புலனடக்கம் மிகவும் அவசியம். இந்த புலன்கள் எல்லாம் நம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமே தவிர அவை இழுத்த இழுப்புக்கு நாம் போய்விடக் கூடாது. இதுவே ஆறாவது படி.

**ஏழாம் படி :** இந்த உலகில் காண்பவை எல்லாமே பிரம்மம் தான். எல்லாமே இறைவன் தான் என உணர்வது பிரம்ம

ஞானம்.

**எட்டாம் படி :** எந்நேரமும் இறைவனின் திருவடி நினைவுடன் இருப்பது. வேறு சிந்தனைகள் இன்றி இருப்பது எட்டாம் படி.

**ஒன்பதாம் படி :** கடவுள் பக்தி மட்டும் இருந்தால் பயனில்லை. சமூக தொண்டாற்றி ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பது தான் உண்மையான பக்தி என்று உணர்வது இந்தப்படி.

**பத்தாம் படி :** அழகு, அறிவு, ஆற்றல் போன்று எத்தகைய தெய்வீக குணத்தைக் கண்டாலும் அதை இறைவனாக பார்ப்பது பத்தாம் படி.

**பதினொன்றாம் படி :** பார்க்கும் அனைத்திலும் இறைவன் குடிகொண்டுள்ளான் என்று பார்க்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வது.

**பனிரெண்டாம் படி :** இன்பம் - துன்பம், விருப்பு - வெறுப்பு ஏழை - பணக்காரன், போன்ற அனைத்து வேறுபாடுகளையும் களைந்து அனைத்திலும் சமத்துவத்தை விரும்புவது பனிரெண்டாம் படி.

**பதிமூன்றாம் படி :** எல்லா உயிர்களிலும் இறைவன் வீற்றிருந்து இறைவனே அவர்களை இயக்குகின்றான் என்பதை உணர்தல் பதிமூன்றாம் படி.

**பதினான்காம் படி :** யோகம், பிறப்பு, இறப்பு மூப்பு ஆகியவற்றால் ஏற்படும் துன்பங்களை அகற்றி இறைவனின் முழு அருளுக்கு பாத்திரமாவதே பதினான்காம் படி.

**பதினைந்தாம் படி :** தீய குணங்களை ஒழித்து நல்ல குணங்களை மட்டும் வளர்த்துக் கொண்டு நம்மிடம் தெய்வம் சத்தை அதிகரிப்பது பதினைந்தாம் படி.

**பதினாறாம் படி :** இறைவனின் படைப்பில் அனைவரும் சமம் என்று உணர்ந்து ஆணவம் கொள்ளாமல் நடப்பது பதினாறாம் படி.

**பதினேழாம் படி :** சர்வம் பிரம்மம் என்று உணர்ந்து பரப்பிரம்ம ஞானத்தை அடைவது பதினேழாம் படி.

**பதினெட்டாம் படி :** யாரிடமும் எந்த உயிர்களிடத்தும் பேதம் பார்க்காமல், உன்னையே சரணாகதி அடைகிறேன் என்று அவனையே சரணடைவது பதினெட்டாம் படி..

**சுவாமியே சரணம் ஐயப்பா..!**

இக்கோயிலைப் பற்றிய வரலாறுகள் சங்க கால தமிழ் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன் தொடக்க காலம் சரியாக வரையறை செய்ய முடியாமல் உள்ளது. ஆயினும் கி.மு. 500க்கும் கி.மு.300க்கும் இடைப் பட்ட காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம் என இந்திய அரசு அதிகாரிகள் கணித்துள்ளார்கள்.

ஆனால் மர்மம் அதன் தோற்ற காலம் பற்றியது அல்ல. அக்கோயிலில் மண்டிக் கிடக்கும் புதையல்களும் சொத்துகளும் அவற்றின் இன்றைய மதிப்பும்தான். இதுவரை கணக்கிடப் பட்ட தங்க குவியல்கள் நவரத்தின ஆபரணங்கள் மட்டும் 22 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிட்டுள்ளனர். இவை வெறும் மிகச் சிறுபகுதி எனவும் இன்னும் எவ்வளவோ திறக்கப் படாத திறக்க முடியாத சரங்க அறைகளில் இருக்கலாம் என உறுதியாக நம்பப் படுகிறது.

அதன் மர்மம் மிக்க விடயமாக ஒரு பகுதியை இரண்டு இராட்சத நாகங்கள் காவல் காத்து வருவதாக கூறப் படுகிறது. இந்தப் பகுதியை தொகுதி 'பி' எனக் குறிப்பிடுகிறார்கள். 6 தொகுதிகள் திறக்கப்பட்டு அவற்றில் பெறப் பட்ட பொருட்களின் இன்றைய மதிப்பு 22 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிட்டுள்ளனர்.

தங்க வைர நகைகள் தங்க பாத்திரங்கள் ஆயுதங்கள் சிலைகள் தங்க யானைகள் தங்க மாலைகள் அட்டியல்கள் அவற்றில் ஒன்று 500 கிலோ எடையும் சுமார் 18 அடி நீளமும் உடையது. அவற்றுடன் உலகின் பல்வேறு நாடுகளின் தங்க நாணயங்கள் கொண்ட பல

# திருவனந்தபுரம் பத்மநாதசுவாமி ஆலய மர்மங்கள்.!

மூடைகளும் கிடைத்துள்ளன.

இவற்றைக் காணும் பொழுது பல நாடுகளுடனும் போரிட்டுப் பெற்ற திறைகளின் தொகுதியாக இருக்க வாய்ப்பு இருப்பதையே தங்க வாள் ஆயுதங்கள் சிலைகள் போன்ற பொருட்கள் காட்டு கின்றன.

2014ல் தொகுதி 'A' யில் எடுக்கப் பட்ட பட்டியல் பிரகாரம் கி.மு. 200 காலப் பகுதியைச் சேர்ந்த 2000 இறாத்தல் எடை கொண்ட தங்க நாணயங்கள் காணப் பட்டதாக கூறப் பட்டுள்ளது.

தொகுதி 'B' யின் கதவு எந்த விதமான பூட்டோ பிணைச்சலோ இல்லாமல் இருப்பதால் அதனை சாதாரணமாக எவராலும் திறந்து விடமுடியாது. யாராவது சித்தர்களால் கருட மந்திரம் தெரிந்தவரால் மட்டும் மந்திர உச்சாடனம் செய்து திறக்க முடியும் எனவும் இன்று அப்படியான மந்திர சித்தி பெற்ற எவரும் இல்லை என இந்துக் குருமார் கூறுகிறார்கள்.

அகர தீபம்

மாலை : 05 மலர் : 02

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

உதவி ஆசிரியர்
**வண்ணை தெய்வம்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

Tel : 00 49 23 81 95 66 09
Fax : 00 49 23 81 95 66 10

Email : akaratheepam@akaram.eu



www.akaram.eu

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA



© ETU e.V.2014 All rights reserved

நல்லவங்களுக்குத் தான் எப்பவும் எதாவது ஒரு குறையையும் வருத்தத்தையும் கொடுத்துடுறான் கடவுள். நம்மளை சோதிக்கறதே வேலையாப் போச்சு கடவுளுக்கு' என்று அலுத்துக் கொள்கிற சராசரி மனிதர்கள் நிறைந்த உலகம் இது.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நல்லதும் கெட்டதுமானதுதான் இந்த வாழ்க்கை என்பது தெரியவரும். நல்லது நடந்துகொண்டிருக்கும் போதே, கெட்டதும் தடக்கென்று வரும். கெட்டதாகவே வந்து கொண்டிருக்கும் போது, ஏதேனும் ஒரு நல்லது நடந்து, மலரச் செய்யும்.

'நல்லவங்களுக்குத்தாம்பா எப்பவும் சோதனை' என்று அலுப்பும் சலிப்புமாகச் சொல்லிக்கொண்டே இருப்பவர்களா நீங்கள்? இனி சொல்லாதீர்கள். தங்கத்தைத்தான் புடம் போடுவார்கள். தகரத்தையா புடம் போடுவார்கள். சோதனை யாருக்கெல்லாம் வருகிறதோ... அவர்களை நோக்கி கடவுள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார் என்றே அர்த்தம். அங்கே அந்த மனிதர்களைக் கொண்டு, அவருக்கும் உலகுக்குமான வாழ்க்கைப் பாடத்தை கடவுள் உணர்த்துகிறார் என்று அர்த்தம்.

நம் வீட்டில் கல்யாணம் என்றால், உறவுகளையும் நண்பர்களையும் தெரிந்தவர்களையும் அறிந்தவர்களையும் அழைக்கிறோம். முக்கியமாக, முப்பத்து முக்கோடி தேவர்களையும் ஆசிர்வதிக்கும் படி அழைக்கிறோம். அப்பேர்ப்பட்ட தேவர்களுக்கு , துர்வாச முனிவரின் கோபத்தால் சாபம் கிடைத்தது. சாபத்தால், பொலிவையெல்லாம் இழந்தார்கள். இழந்ததைப் பெற வேண்டுமெனில், பலம்

# வரமே சாபமான கதை தெரியுமா?

கிடைக்க வேண்டும். பலம் கிடைக்க, கடலில் அமிர்தம் கடைய வேண்டும். இந்த அமிர்தத்தைச் சாப்பிட்டால், பலம் கிடைக்கும்.

ஆனால் அமிர்தம் கடையவே பலமில்லை. அதற்கு பலம் பொருந்திய அசுரர்கள் தேவைப்பட்டார்கள். அசுரர்களும் வந்தார்கள். ஆனால் அமிர்தம் வந்ததும் பிடுங்கிக் கொண்டார்கள். அப்போது மகாவிஷ்ணு., மோகினிப் பெண்ணாய் அவதாரம் எடுத்தார். கொஞ்சிப் பேசி, அமிர்தத்தை அசுரர்களிடம் இருந்து வாங்கினாள். அமிர்தத்தை தேவர்கள் அனைவருக்கும் வழங்கினாள். பலம் கிடைத்தது. பலன் பெற்றார்கள். சாபத்தில் இருந்து விமோசனம் பெற்றார்கள். நல்லது கெட்டதுகளை உணர்த்துவதற்காகவே, மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்தார்.

அதேபோல், மகிஷி எனும் அரக்கியை அழிக்க, ஓர் அவதார நிகழ்வும் அதையொட்டி மக்களுக்கும் உலகுக்கும் ஏதோவொன்றை உணர்த்தவும் திருவுளம் கொண்டார் இறைவன். அதற்காகத்தான், அப்படியொரு வரத்தைக் கேட்கும் உணர்வைத் தூண்டினார் திருமால். பிறக்கும் ஆண்மகன், 12 வயது பாலகனாய் இருக்கும் வேளையில், என்னைக் கொல்லுகிற சக்தி இருக்கவேண்டும் என வரம் கேட்டாள்.

இந்த வரத்தைக் கேட்டவளைக் கொண்டு வரம் கேட்டவளையே அழிப்பதற்கான முயற்சிதான் அவதாரம். மீண்டும் மோகினி அவதாரம். மோகினியாய் வந்து, பிறகு ஐயப்பனை உருவாக்குகிற அவதாரம்!

அவதாரம் எடுப்பதில்தான் மகாவிஷ்ணு அசகாயசூரராயிற்றே. எத்தனையோ அவதாரங்களை எடுத்திருக்கிறார். இந்த உலகத்தை உய்விக்க, பலப் பல அவதாரங்களை நிகழ்த்தியிருக்கிறார். அவ்வளவு ஏன்... இதே மோகினி அவதாரத்தை, பாற் கடலைக் கடையும் போது, அமிர்தத்தை தேவர்களுக்கு வழங்க எடுத்தார் அல்லவா. அதேபோல் ஐயப்ப சுவாமிக்காக, அவரின் வருகைக்காக இன்னொரு முறை மோகினி அவதாரம் எடுத்தாரில்லையா.

அதேபோல், மோகினி அவதாரம் இன்னொரு தடவையும் எடுத்தார். அதையும் பார்த்துவிடுவோம்.

இப்படித்தான் பஸ்மாசுரன் எனும் அரக்கன், சிவபெருமானை நோக்கி கடும் தவம் இருந்தான். அவனுடைய தவத்தில்



மகிழ்ந்த ஈசன், அவனுக்கு முன்னே நின்று காட்சி கொடுத்தார். என்ன வரம் வேண்டுமோ கேள் என்றார். 'நான் யார் தலையில் கை வைத்தாலும், அவர்கள் உடனே எரிந்து சாம்பலாகிவிட வேண்டும். இதுவே நான் கேட்கும் வரம்' என்று கேட்டான்.

சிவபெருமானும் அந்த வரத்தைக் கொடுத்தார்.

ஆனால், பஸ்மாசுரனுக்கு திடீரென வந்தது சந்தேகம். உலகில், சந்தேகம் யாரைவிட்டது. 'நாம் நினைத்தபடி, வரம் கொடுத்துட்டாரா, இல்லையா. நிஜமாவே, தலையில் கை வச்சா, எரிஞ்சு பஸ்பமாகுமா. யோசித்தான். சந்தேகப் பட்டான். சோதித்துப் பார்க்கலாமே என முடிவு செய்தான். அதன்படி தலையில் கை வைத்து சோதிக்க முடிவு செய்தான். அவன் யார் தலையில் கைவைக்க முடிவு செய்தான் தெரியுமா? சிவபெருமான் தலையில் கை வைக்க முடிவு செய்தான்.

தானம் கொடுத்த மாட்டையே பல்லைப் பிடுங்கிப் பார்த்த கதை என்பார்களே. அதேபோல், வரம் கொடுத்தவரின் தலையிலேயே கை வைக்க நினைத்தான் பஸ்மாசுரன். அப்போது சிவபெருமானைத் தேடி பஸ்மாசுரன் ஓட... அங்கே அழகிய இளம்பெண், தேவதை மாதிரி ஒருத்தி, மோகினி போன்ற வசீகரம் கொண்டவள் அவனுக்கு எதிரே வந்து நின்றாள். நின்றது... மோகினி அல்ல. மோகினியாய் வந்த திருமால். சிவனாரக் காக்க திருமால் மோகினியாய் வந்தார்.

அவளைப் பார்த்ததும் கிறங்கிப் போனான் பஸ்மாசுரன். 'வா... ஆடுவோம். உனக்கும் எனக்கும் போட்டி' என்றாள். அவளை அடையும் நோக்கத்தில் சரியென்றான். ஆட்டம் தொடங்கியது. அவள் ஆடினான். அவளும் ஆடினாள். மோகினி வலது காலை தூக்கினாள். அவனும் வலது கால் தூக்கி ஆட்டம் போட்டான். பிறகு இடது காலால் கோலமிடுவது போல் தரையில் விரல்களால் வித்தை காட்டினாள். அவனும் விரல்களால் கோலமிட்டான்.

மோகினி, வலது கரத்தைத் தூக்கினாள். அவனும் கையைத் தூக்கினான். அதில் அபிநயம் பிடித்துக் காட்டினாள். அவனும் அபிநயம் பிடித்தான். இதேபோல் இடது கையால் அபிநயம் பிடித்தாள். அவனும் இடது கையால் அபிநயம் பிடித்தான்.

மீண்டும் வலது கையைத் தூக்கினாள். அவனும் தூக்கினான். வலதுகையால் தலையைத் தொட்டாள். அவனும் தொட்டான். அவ்வளவுதான்... பஸ்பமானான். வரமே சாபமாகிப் போனது

# நிலையில்லாதவற்றை நினைத்து நித்தம் ஏங்குவானேன்?

பக்தி என்பது ஏதோ போகிறபோக்கில் செய்யப்படுவது இல்லை, மனம் முழுவதும் அந்த மகேசனிடம் பூரணமாக நிரம்பி இருக்க வேண்டும். பாண்டிய மன்னனிடம், குதிரைகள் வாங்காமலேயே, வாங்கிவிட்டதாக மாணிக்கவாசகப் பெருமான் சொல்லிவிட்டு, அரசன் கொடுத்த நிதியை மகேஸ்வரனுக்கு திருக்கோயில் எழுப்பப் பயன்படுத்தி விட்டார்.

ஓர் அரசுப் பணிக்காகச் செலவிடப் படவேண்டிய பணத்தை, தன் சொந்த விருப்பத்தில் கோயில் கட்ட செலவிட்டு விட்டாரே, மன்னருக்குத் தெரிந்தால் என்னாகுமோ என்று உற்றார், உறவினர் அனைவரும் அஞ்சி நடுங்கினர்.

மாணிக்கவாசகர் கொஞ்சம்கூட பதறவில்லை. காரணம் என்ன?

**“இறக்கினும் இன்றே இறக்குக என்றும்**
**இருக்கினும் இருக்குக வேந்தன்**
**ஒறுக்கினும் ஒறுக்க உவகையும் உடனே**
**ஊட்டினும் ஊட்டுக வானில்**
**சிறக்கினும் சிறக்க கொடியதீ நாகஞ்**
**சேரினும் சேருக சிவனை**
**மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால்**
**மாற்றுவார் யாரென மறுத்தார்.”**

- என்று பதிகம் சொல்லி வாளாவிருந்தார் அவர். அதாவது, எல்லாம் சிவன் செயல் என்று வந்துவிட்ட பிறகு, செயல்புரிவதற்கு காரணமானவன் நாம்

என்பதை ஒருவர் எப்படி நினைக்க முடியும் என்று கேட்கிறார் மணிவாசகப் பெருந்தகை! என்ன ஒரு அதீத நம்பிக்கை! குதிரை வாங்கும் பணத்தை வைத்துக் கொண்டு, குதிரை ரேஸுக்குப் போனால் தான் தப்பு. ஆண்டவனுக்கு ஆலயம் எழுப்புவது எவ்வாறு தவறாகக் கருதப்படும்?

ஆவுடையார் கோயில் சாதாரணமான ஒன்றா என்ன? 'திருப்பெருந்துறை உறை சிவபெருமானே' - இந்த வார்த்தையை பிரயோகிக்காத பக்தர்கள் கூட்டம் உண்டா? ஆத்மலிங்கமாக, அருவ நிலையில் இறைவன் அருள்பாலிக்கும் திருத்தலம் இது. மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் உபதேசம் செய்த இடமல்லவா, பக்தர்களுக்கு யோகம் தரவேண்டும் என்பதற்காகவே அம்பிகை யோகாம்பாளுடன் ஆத்மநாத சுவாமியாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். தெற்கு பார்த்த கோயில். மாணிக்கவாசகரின் மூச்சுக்காற்று இன்னும் அங்கே சுற்றி சுழன்று வருகிறது!

மாணிக்கவாசகருடைய பக்தி, வைராக்கியம் மிகுந்த பக்தி! இளமை, செல்வம், ஆயுள் எல்லாம் நிலையானது அழிவில்லாதது என்று பலரும் நம்புகிறார்கள். இவர்களைப் பார்த்து சிரிக்கிறார் திருமூலர்:

**"ஆண்டு பலவும் கழிந்தன! அப்பனைப்**
**பூண்டு கொண்டாரும் புகுந்து அறிவார் இல்லை**
**நீண்ட காலங்கள், நீண்டு கொடுக்கினும்**
**நூறாண்டு விளக்கின் சுடர் அறியாரே!**

வருடங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன, உண்மையான பரம்பொருளை அறிய மனித மனம் நாட்டம் கொள்வதில்லையே என்று ஏங்குகிறார் திருமூலர். இன்னொரு திருமந்திரப் பதிகத்தில் மிக அழகாக இளமையின் நிலையாமையை எடுத்துச் சொல்லுகிறார்:

**"பாலன், இளையன், விருத்தன்** - என
நின்ற காலங்கழிவன கண்டும் அறிகிலார்"

வானத்தில் மின்னல் தோன்றி மறைவதைப்போல இளமையும் செல்வமும் நம்மை விட்டு விரைவாகக் கடந்து போய்விடும். அதற்குள் நாம் இறைஉணர்வைப் பெற முயற்சிக்க வேண்டும் என்பது திருமூலரின் அறிவுரை. ஆழ்வார்களின் தலைமகனாக விளங்கும் நம்மாழ்வார் திருவாய்மொழியில் மிக அருமையான செய்திகளை உள்ளடக்கிய பலநூறு பாசுரங்களைப்



திருமூலர்

நம்மாழ்வார்

ஆதிசங்கர பகவத் பாதாள்

படைத்திருக்கிறார். அவற்றிலிருந்து ஒன்று:

**“பரவி வானவர் ரத்த நின்ற**
**பரமனை, பரஞ்சோதியை,**
**குரவை கோத்த குழகனை,**
**மணிவண்ணனை, குடக்கூத்தனை,**
**அரவம் ஏறி அலைகடல்**
**அமரும் துயில்கொண்ட அண்ணலை**
**இரவும் நண்பகலும் விடாது, என்றும்**
**ஏத்துதல் மனம் வைம்மினோ”**

இதர விஷயங்களில் ஈடுபடும் மனத்தை மீட்டு கிருஷ்ணனாய் அவதரித்த பரமனிடத்தில் மனம் லயிக்க வேண்டும் என்கிறார் நம்மாழ்வார். பரமன் எப்படிப்பட்டவனாம்? நித்ய சூரிகள் துதித்து ஏத்தும்படி ஒளியை உடையவன், நீலமணி போன்ற வடிவுடையவன், குடக்கூத்து ஆடியவன், அநேக பெருமைகளையும் சிறப்புகளையும் கொண்டிருக்கிறவன் இறைவன்.

இந்தப் பாசுரத்தில், மனம் அந்த மாலவனையே சதா நினைத்திருக்க வேண்டும் என்கிறார் நம்மாழ்வார். ஆனால் யதார்த்தத்தில் நடப்பது என்ன? ஒரு அருமையான பழமொழி நினைவுக்கு வருகிறது: ‘தடை செய்யப்பட்ட விஷயங்களில்தான் மனம் அதிகமாகத் தன் விருப்பத்தைச் செலுத்துகிறது!’

சாதாரணமாக ஒரு வாரம் பத்தியம், உணவுக்கட்டுப்பாடு என்று விரதம் இருக்கிறோம். உடல்நலன் சீரானபிறகு மீண்டும் ருசியான பதார்த்தங்களைத் தேடி ஓடுகிறோம்.

முள்செடியை விரும்பிச் சாப்பிடும் ஒட்டகம், அந்த முள்செடியை சாப்பிடும் போது முள்பட்டு வாயில் ரத்தம் வரும். பிறகு கொஞ்சநாளைக்கு ஒட்டகம் முள்செடியை நாடாது, அப்புறம் மீண்டும் அந்த முள்செடியைத் தேடிப் போகும், சாப்பிடும். இதேபோல்தான் சாதாரண மனிதர்களின் நிலையும்! மனக் கட்டுப்பாட்டை நமக்கு நாமே விதித்துக் கொண்டால் நல்ல சூழ்நிலைகள் உருவாகி, நல்ல விஷயங்கள் தாமாக நடைபெறும்.

தன்னுடைய பஜகோவிந்தத்தில் ஆதிசங்கர பகவத் பாதாள் சொல்கிறார்:

நல்லோர் உறவால் பற்றின்மை ஏற்படுகிறது, பற்றின்மையால் மதிமயக்கம் நீங்கும், மதிமயக்கம் நீங்கினால் மாறுபடாத உண்மை விளங்கும், மாறுபடாத உண்மை விளங்கினால் அதுவே ஜீவன் முக்தி என்கிறார் தெள்ளத் தெளிவாக! ஆனால் மதிமயக்கத்திலிருந்து தப்பிப்பது அல்லது விடுதலை பெறுவது எப்படி? அவ்வளவு சீக்கிரம் இந்த மாயையிலிருந்து விடுபட முடியுமா என்ன?

**“செல்வத்தாலும் சுற்றத்தாலும்**
**கருவம் கொள்ளாதே காலன்**
**அனைத்தையும் ஒரு நிமிஷத்தில்**
**கொண்டுபோய் விடுவான். மாயா**
**மாயமான இதையெல்லாம் விட்டுவிட்டு**
**பிரம்ம பதத்தை அறிந்து**
**அதில் புகுவாயாக.”**

- என்கிறார் ஆதிசங்கரர். ஆதிசங்கரர், திருஞானசம்பந்தர், சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியார் - இவர்கள் குறைந்த ஆயுள்தான் வாழ்ந்தார்கள். ஆனால் நீண்ட ஆயுளோடும் நிலைத்த புகழோடும் ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வழிகாட்டி விட்டு சென்றிருக்கிறார்கள். அந்த ஞானிகளின் வழிகாட்டுதல்படி நடந்தால் வாழ்க்கை வளமாக இருக்கும்.

பாகம்- 14

# அறிவோம் ஆன்மீகம்

## தமிழரின் ஆலயங்களும் அவற்றின் நிர்வாகிகளும் தமிழரே இல்லையா?

ஆன்மீகம் என்றால் என்ன? என எமது ஆலய நிர்வாகிகளும் ஆன்மீகப் பேச்சாளர்களும் அறிந்துதான் எமக்கு ஆன்மீக அறிவை ஆலயங்கள் மூலம் புகட்டுகின்றனவா? இது போன்ற பல அடிப்படையான கேள்விகளுக்கான பதிலை நாம் தேடி அறிந்து கொள்ளாமல் எமது ஆலய வழிபாட்டையும், ஆன்மீக அறிவையும் செழுமைப்படுத்த முடியாது. இந்த முக்கியமான விடயத்தை முதலில் கைகளில் எடுத்து தமது ஆன்மீக வாழ்வை எமது இனத்தின் முன் மாதிரியாக விளங்கினார்.

அவரது சைவ வேளாள மக்களை மேன்மைப்படுத்தும் ஆன்மீகமாக கருதுவதா? அல்லது காலத்தின் கட்டாயம் பற்றிய நிலைப்பாடு என எடுத்துக் கொள்வதா? என முதலில் முடிவு செய்வது முக்கியமானது. எனவே முதலில் நாவலரின் ஆன்மீகம் தொடர்பான புரிதலை நாம் தெரிந்து கொள்வது கட்டாயமாகிறது.

இதற்கு அண்மையில் வரணி அம்மன் கோயில் திருவிழாவில் தீண்டாமை காரணமாக சாதிவெறியால் அம்மன் பக்தர்கள் மட்டுமே வடம் பற்றி இழுக்க வேண்டிய தேர் திருவிழாவில் இழுவை

இயந்திரம் மூலம் அம்மன் வீதிவலம் வந்தகேவலம் எமதுநாட்டில் நடந்த சேதிகளை நாம் அறிவோம்.

இந்தச் சாதி வெறி தீண்டாமை வெறி கொண்ட ஆலய நிர்வாகிகள் சில வருடங்களுக்கு முன்னர் நல்லூர் கந்தனின் தேர் விழாவில் சிங்கள இராணுவம் அணியாக திரண்டு தேரை இழுத்ததை எப்படி ஏற்றனர்? அத்தனை இராணுவத்தினரும் உயர்சாதிச் சிங்களவரா? ஆதை ஏற்று அனுமதித்தவர்களால் எப்படி இந்தச் சாதி இனவெறிக் கொடூரம் நிகழ்ந்தது?

இதுதான் எமதுமக்களின் ஆன்மீக அறிவும் இறைபக்தியும் என அங்கீகரிக்கப் போகிறோமா? இப்படியான பொறுப்பற்ற தமிழ் இனத்தை சீரழிக்கும் இழிவுபடுத்தும் வாழ்வியல் தான் தமிழ் இனத்தின் வரலாறா?

தமிழ் இனத்தின் ஆன்மீகம் மனித குலத்தின் மிகத் தொன்மையான முருக வழிபாடாக தமிழ் இலக்கியங்களில் பதிவாகி உள்ளன. அக்காலத்தில் காதல் வயப்பட்ட மணம் ஆகாத இளம் பெண்களின் காதல் விரக தாபம் காரணமாக உருவாகும் பசலை போன்ற நோய்களை ஆற்றுப்படுத்த அவளது பெற்றோர்களின் விருப்பத்துக்கு இணங்க முருக பக்தர்களால் நடத்தப்பட்ட வெறியாட்டம் என்னும் விழாவாக தமிழரின் ஆன்மீக வரலாறு என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

அப்படியானால் தமிழரின் ஆன்மீகப் பயணம் பெண்களின் துயரம் தொடர்பாக உருவான ஒன்று என்பது உறுதிபடத் தெரிகிறது. இக்கருத்தை உறுதி செய்வது போல மக்கள் சேவையே மகேசன் சேவை என்கிற தமிழ்ப் பழமொழி உள்ளது. இன்றைய தமிழரின் ஆலயங்களும் அவற்றின் நிர்வாகஅமைப்புகளும், ஆலய தர்மகர்த்தாக்கள் சபைகளும், தமிழ் மக்களுக்கான அவற்றின் தேவைகள் சேவைகளை ஆற்றி வருகின்றனவா? என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டாமா?

உலக நாடுகள் எமது இனத்தின் அரசியல் உரிமைகள் கோரும் அறவழி ஆன்மீகப் போராட்டத்தை அதன் அவசியத்தை அறிந்து கொள்ள முற்படாமல் உதாசீனப்படுத்தியதால் அதுவே ஆயுதப் போராட்டமாக வெடித்தது. அறவழிப் போராட்டமாக இருந்த பொழுது எந்த ஒரு மதமும் தனது ஆன்மீக பலத்தை மக்களின்

தேவைக்காக பயன்படுத்த முன் வரவில்லை என்பது ஆன்மீகவாதிகள், குரு பீடங்கள், குருமகா சந்நிதானங்கள் தமது மிகப் பெரும் ஆன்மீகப் பொறுப்பை ஏற்கத் தவறி விட்டனர் என்பது மிகக் கசப்பான வரலாற்று உண்மை.

ஆனால் மிகப் பெரும் தமிழ் இன விடுதலைப் போரை பயங்கரவாதமாக பட்டியலிட்டு உலகஅளவில் நடத்தி முடிக்க தமிழ் மக்களின் இந்து கத்தோலிக்க இஸ்லாமிய ஆன்மீகத் தலைவர்களும் அமைப்புகளும் துணையாக அமைதி காத்து தன்இன அழிப்பையே வேடிக்கை பார்த்த வரலாற்றை 1980களின் தொடக்கம் முதல் 2018 வரை நீண்டு கொண்டே போவதைக் காண்கிறோம்.

தமிழ் மக்களின் ஆன்மீகத்தால் தனது கோயில்களில் கூடத் தமிழில் வழிபாடு பூசைகள் நடத்தும் அளவுக்கு வலுவற்ற ஆன்மீக அறிவையே கொண்டிருப்பதை எப்படி நம் இனம் கொண்டிருக்கிறது? நமது கோயில் ஆதீனங்களும் நிர்வாக அமைப்புகளும் ஆன்மீக அறிவுச் சூனியங்களாக உள்ளன என்பதா?

எமது சொல்வேந்தர்களும், இலக்கிய பட்டிமன்றப் பேச்சாளர்களும் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் மேடைகளில் வந்து படித்தவற்றை வாந்தி எடுத்து விட்டுப் பணமூட்டைகளை எடுத்துப் போகிறார்களா? என்பது எமது கவலையாக உள்ளது.

அடுத்த இதழில் தமிழ் இன அழிப்புக்கு இவர்கள் எப்படி உதவினார்கள்? இப்பொழுதும் உதவி வருகிறார்கள் என்பதையும் தமிழ் இனத்தின் தேசியத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய இவர்கள் என்ன செய்தார்கள்? செய்கிறார்கள்? என்பன பற்றியும் இத்தொடரில் பேசப்படும். மறுப்புக் கருத்துகளைப் பதிவு செய்ய விரும்பும் வாசக அன்பர்கள் ஆன்மீக வாதிகள் தமது கருத்துகளைப் பதிவு செய்யவும் அகரதீபம் இடம் அளிக்கும் எனவும் தெரிவித்துக் கொள்கிறது.

**தொடரும்...**

# ஆடி அமாவாசை...

## முன்னோருக்கு மட்டுமல்ல, அம்பிகை வழிபாட்டுக்கும் உகந்த நாள்!

அமாவாசைக்கு முன்பு வருவது போதாயன அமாவாசை என்று அழைக்கப் படுகிறது. போதாயன அமாவாசை என்பது போதாயனர் என்ற ரிஷியின் பெயரால் அழைக்கப் படுகிறது. போதாயனர் என்பவரின் சீடர் ஆபஸ்தம்பர். ஒருமுறை போதாயனருக்கும் அவருடைய சீடருக்கும் திதிகளை நிர்ணயிப்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் ஆபஸ்தம்பர் தனியாகச் சென்று சூத்திரம் இயற்றினார். அதற்கு ஆபஸ்தம்ப சூத்திரம் என்று பெயர்.

இரண்டு முறைகளிலுமே வைதிக காரியங்களைச் செய்யும் முறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. போதாயனரின் கருத்தின்படி அமாவாசைக்கு மறுநாள் வரும் பிரதமை திதி அன்று மாலை சூரிய அஸ்தமனத்துக்குள் முடிந்து துவிதியை திதி வந்துவிட்டால், அமாவாசையின் முதல் நாளான சதுர்த்தசியன்றே திதி கொடுக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார். அதுவே போதாயன அமாவாசை. ஆனால், திதி கொடுக்கும் நாளில் அமாவாசை இருக்கவேண்டும் என்பது ஆபஸ்தம்பரின் கருத்து. இதுதான் அமாவாசைக்கும் போதாயன அமாவாசைக்கும் உள்ள வித்தியாசம்.

### ஆடி அமாவாசை

இந்த போதாயன அமாவாசைக்குக் காரணமாக ஒரு சம்பவம் சொல்லப் படுகிறது. குருக்ஷேத்திர யுத்தம் தொடங்கப் போகும் நேரம். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக களபலி கொடுப்பது வழக்கம். களபலி

கொடுப்பதற்கு உகந்த நாளும் நேரமும் தெரிந்துகொள்வதற்காக, ஜோதிடத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்த சகாதேவனிடம் சென்று ஆலோசனை கேட்டான் துரியோதனன். கேட்பவன் பகைவனே ஆனாலும் சத்தியமே பேசவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த சகாதேவன், அமாவாசையன்று களபலி கொடுத்தால், யுத்தத்தில் வெற்றி கிடைக்கும் என்று கூறிவிட்டான்.

சகாதேவன் கூறியபடி துரியோதனன் அமாவாசையன்று களபலி கொடுத்தால் தாங்கள் வெற்றி பெறுவது கடினம் என்பதைப் புரிந்துகொண்ட தர்மபுத்திரர் கிருஷ்ணரிடம் சென்று ஆலோசனை கேட்டார். தர்மம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக எத்தகைய பழிச் சொல்லையும் ஏற்றுக்கொள்ளும் கிருஷ்ணர் ஒரு தந்திரம் செய்தார்.

அமாவாசைக்கு முந்தின நாள் ஒரு குளத்தின் கரையில் அமர்ந்து தர்ப்பணம் கொடுத்துக்கொண்டிருந்தார். இதைப் பார்த்த சூரியனும் சந்திரனும் கிருஷ்ணரிடம் வந்து, 'நாங்கள் ஒன்றாக சேரும் நாள்தானே அமாவாசை. நாளைதானே நாங்கள் ஒன்றாக சேரும் நாள். ஆனால், நீங்கள் இன்று தர்ப்பணம் கொடுக்கிறீர்களே?' என்று கேட்டபோது, கிருஷ்ணர் கள்ளச் சிரிப்பு சிரித்தபடி, 'அதுதான் இப்போது ஒன்றாக வந்திருக்கிறீர்களே!' என்று விஷமத்துடன் கூறினார்.

கிருஷ்ணர் தர்ப்பணம் கொடுப்பதைப் பார்த்த துரியோதனன், சகாதேவன் சொன்னபடியே அன்றே களபலி கொடுத்து விட்டான். மறுநாள் உண்மையான அமாவாசையன்று களபலி கொடுத்தனர் பாண்டவர்கள். அதனால் வெற்றியும் பெற்றனர்.

ஆடி அமாவாசை மற்றும் அதற்கு முந்தைய தினம் ஆகியவற்றின் மகிமையை விளக்கும் வகையில் ஒரு கதை சொல்லப் பட்டிருக்கிறது. அழகாபுரி என்ற தேசத்தின் அரசர் அழகேசன். அவருக்குப் பிறகு தேசத்தை ஆட்சி செய்ய வாரிசு இல்லை. அதற்காக புத்திரபாக்கியம் வேண்டி மனைவியுடன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார்.

அதன் பயனாக அவருக்கு ஒரு மகனும் பிறந்தான். குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் அரசர் இருந்தபோது, 'உன் மகன் இளமைப் பருவத்தை அடையும் போது மரணம் அடைவான்' என்பதாக ஓர் அசரீரி ஒலித்தது. மேலும் இறந்த பிறகு அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால், வரப்போகும் மனைவியின் மாங்கல்ய பலத்தினால் மறுபடியும் அவன் உயிர் பெறுவான் என்றும் அந்த அசரீரி கூறியது.

## புனித நீராடல்

அசரீரி கூறியது போலவே அரசரின் மகனும் இளமைப் பருவம் அடைந்தபோது இறந்து போனான். அரசர் இறந்துபோன தன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெண் தேடியபோது, பெற்றோர் இல்லாமல் உறவினர்களின் கொடுமைக்கு ஆளாகி விரக்தியுடன் வாழ்ந்து வந்த ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து வைத்துவிட்டனர். அன்று இரவு அந்தப் பெண்ணையும்,

அரசரின் இறந்து போன மகனையும் காட்டில் கொண்டு சென்று விட்டுவிட்டு வந்தனர்.

அந்தப் பெண் தன் கணவன் உறங்குகிறான் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும் தான் தான் திருமணம் செய்து கொண்டவன் இறந்து விட்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது. அழுது புரண்டு கதறினாள். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். தனக்குத் தெரிந்த தெய்வங்களை எல்லாம் அழைத்துக் கதறி அழுதாள். பேதைப் பெண்ணின் அழுகுரல் கேட்டு மனம் இரங்கிய அம்பிகை, இறந்துபோன அவளுடைய கணவனை உயிர் பெறச் செய்தாள்.

தனக்கு அருள் புரிந்த தேவியிடம் அந்தப் பெண், "தாயே ஈஸ்வரி, இருண்டு போன என் வாழ்க்கையை மறுபடியும் பிரகாசிக்கச் செய்தது போலவே, இந்த நாளில் உன்னை வழிபடும் பெண்களுக்கும் அருள் புரிய வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டாள். இந்த நிகழ்ச்சி நடந்தது ஆடி அமாவாசைக்கு முந்தின நாள் ஆகும்.

மற்றவர்களின் நன்மைக்காக வேண்டிக் கொண்ட அந்தப் பெண்ணின் உயர்ந்த குணத்தைப் போற்றும் வகையில், "மகளே, நீ வேண்டிக் கொண்டபடியே இந்த நாளில் உனக்கு நான் அருள்புரிந்த கதையைப் படித்துவிட்டு, மறுநாள் ஆடி அமாவாசையன்று விரதம் இருந்து, மஞ்சள், குங்குமம் உள்ளிட்ட மங்கலப் பொருட்களை சுமங்கலிப்பெண்களுக்குத் தந்து என்னை வழிபடுபவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பதுடன், அவர்கள் இல்லத்தில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் உண்டாகும்'' என்று வரம் தந்து அருளினாள். அந்த வகையில் ஆடி அமாவாசை முன்னோர் வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், அம்பிகையை வழிபடுவதற்கும் உகந்த நாளாகத் திகழ்கிறது.

## ஆடி அமாவாசை

மாதம்தோறும் வரும் அமாவாசை திதியில் மறைந்த நம் முன்னோர்களுக்கு

தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்பது சாஸ்திரம். மாதம்தோறும் கொடுக்க முடியா விட்டாலும், ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை, தை அமாவாசை ஆகிய தினங்களில் கண்டிப்பாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

சாஸ்திரப்படி ஆடி முதல் மார்கழி முடிய உள்ள காலத்தில் நம்முடைய முன்னோர்களான பித்ருக்கள் நம்மைப் பார்ப்பதற்காக இந்த உலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் பித்ரு லோகத்தில் இருந்து புறப்படும் நாள் ஆடி அமாவாசை. எனவே, அவர்களை நாம் நினைவில் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பது போலவும், அவர்களை பூமிக்கு வரும்படி அழைப்பு விடுப்பது போலவும் ஆடி அமாவாசையன்று அவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். அவர்கள் பூமிக்கு வந்து சேரும் நாள் மகாளய அமாவாசை ஆகும்.

எனவே, அன்று அவர்களுக்கு நாம் தர்ப்பணம் கொடுக்க வேண்டும். பித்ருலோகத்தில் இருந்து வந்த நம் முன்னோர்கள் திரும்பவும் பித்ருலோகத்துக்குச் செல்லும் நாள் தை அமாவாசை. அன்று அவர்களை வழியனுப்பும் விதமாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும். இந்த மூன்று அமாவாசை தினங்களில் நாம் கண்டிப்பாக நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

முன்னோர் வழிபாட்டுக்கு உகந்த தலங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் ராமேஸ்வரம் மிகவும் விசேஷமான தலம் ஆகும். ஆடி அமாவாசையன்று ராமேஸ்வரத்தில் கடல் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பது அளவற்ற நன்மைகளைத் தரவல்லது. குறிப்பாக அக்னி தீர்த்தத்தில் நீராடுவது மிகவும் விசேஷம்.

## ஆடி தர்ப்பணம்

ஆடி அமாவாசையன்று பித்ரு வழிபாட்டை காலையிலேயே தொடங்கி விட வேண்டும். ஏதேனும் ஒரு தீர்த்தக் கரைக்குச் சென்று நீராடி, தர்ப்பணம் கொடுத்து வரவேண்டும். மதியம் வீட்டில் மறைந்த நம் முன்னோர்களின் படங்களுக்கு மாலை அணிவித்து, விளக்கேற்றி, ஓர் இலையில் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு வகைகளைப் படைக்க வேண்டும்.

பின்னர் தீபாராதனை காட்டி, காகத்துக்கு உணவளிக்க வேண்டும். பிறகு வீட்டில் உள்ள பெரியவர்களை முதலில் சாப்பிடச் செய்யவேண்டும். பிறகே நாம் சாப்பிடவேண்டும். இப்படிச் செய்வதால், நம் முன்னோர்கள் மிகவும் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிக்கின்றனர். அவர்களுடைய ஆசிகளால் நம் வாழ்க்கையும் நம் சந்ததியினரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியும் சகல செல்வங்களும் நிறைந்ததாக அமையும் என்பது உறுதி.

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்


Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, 3008 Bern, Switzerland
( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch


அனைத்து நாட்களும் காலை 09.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை திருக்கோவில் திறந்திருக்கும்.

மாலை 18.00 மணிமுதல் 20.00 மணிவரை பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

## 2018ம் ஆண்டு நாட்காட்டி

17.08.2018
கொடியேற்றம்

25.08.2018
தேர்த்திருவிழா
நடைபெறும்

### கடகம் (ஆடி)

| | | |
|---|---|---|
| 10.07.18 | செவ்வாய் | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 12.07.18 | வியாழன் | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |
| 17.07.18 | செவ்வாய் | கடகப்பிறப்பு (ஆடி), மாலை 18.30 மணிமுதல் |
| 20.07.18 | வெள்ளி | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல் |
| 24.07.18 | செவ்வாய் | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 27.07.18 | வெள்ளி | முழுமதி சிறப்பு வழிபாடு, பட்டினத்தடிகள் குருபூசை மாலை 16.30 மணிமுதல் |

### மடங்கல் (ஆவணி)

| | | |
|---|---|---|
| 08.08.18 | புதன் | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 10.08.18 | வெள்ளி | கடகத்திங்கள் மறைமதி நோன்பு (ஆடி அமாவாசை), காலை 10.00 மணிமுதல் |
| 13.08.18 | திங்கள் | மடங்கற்கணை (ஆடிப்பூரம்), மாலை 16.30 மணிமுதல் |

### அட்டி (விளம்பி) ஆண்டுத் திருவிழா

| | | |
|---|---|---|
| 16.08.18 | வியாழன் | ஞானலிங்கேச்சுரம் திருவிழா - விநாயகர் ஓமம், ஒன்பது கோள்கள் திருச்சாந்திவிழா, மாலை 16.30 மணிமுதல் |
| 17.08.18 | வெள்ளி | திருக்கொடியேற்றம், காலை 08.00 மணிமுதல் மீனாட்சி சுந்தரேசர் கோலம் மாலை 17.00 மணிமுதல் |
| 18.08.18 | சனி | நாயன்மார் இணையடி வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 19.08.18 | ஞாயிறு | குருந்தமரத்தடியிற் தென்முகக்கடவுள் அருட்காட்சி, மாலை 15.30 மணிமுதல் |
| 20.08.18 | திங்கள் | பிட்டிற்கு மண்சுமந்த பொன்மேனிக்கோலம், மாலை 16.30 மணிமுதல் |
| 21.08.18 | செவ்வாய் | ஐயம் இரக்கும் பெருமான் திருக்கோலம் - மடங்கற்குருகு (ஆவணிமூலம்)<br>காசிவாழ் உலகம்மை உடனாய உலகநாதன் திருக்கோலம், மாலை 16.30 மணிமுதல் |
| 22.08.18 | புதன் | மாம்பழத்திருவிழா, மாலை 16.00 மணிமுதல் |
| 23.08.18 | வியாழன் | வேட்டைத்திருவிழா, கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 16.00 மணிமுதல் |
| 24.08.18 | வெள்ளி | பெருந்தேவன் கோலத்தில் சப்பறம் - இலக்குமிநோன்பு (வரலக்ஷ்மிவிரதம்) மாலை 15.30 மணிமுதல் |
| 25.08.18 | சனி | தேர்த்திருவிழா காலை 07.30 மணிமுதல் முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்; |
| 26.08.18 | ஞாயிறு | திருமுழுக்குவிழா (தீர்த்தம்) காலை 07.30 மணிமுதல் கொடியிறக்கம் மாலை 16.30 மணிமுதல் |
| 27.08.18 | திங்கள் | ஞானாம்பிகை ஞானலிங்கப்பெருமான் மணவினைத் திருவிழா (திருக்கல்யாணம்), மாலை 16.00 மணிமுதல் |
| 28.08.18 | செவ்வாய் | வைரவர்மடை, மாலை 16.30 மணிமுதல் |

### கன்னி (புரட்டாதி)

| | | |
|---|---|---|
| 07.09.18 | வெள்ளி | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 09.09.18 | ஞாயிறு | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |
| 12.09.18 | புதன் | பிள்ளையார்நான்மை (விநாயகர்சதுர்த்தி விரதம்), சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல் |
| 22.09.18 | சனி | 1ம் கன்னிக்காரி நோன்பு (1வது புரட்டாதிச்சனிவிரதம்) காலை 09.00 மணிமுதல்<br>காரிக்கழுவாய் (சனிப்பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 24.09.18 | திங்கள் | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 29.09.18 | சனி | 2ம் கன்னிக்காரி நோன்பு (1வது புரட்டாதிச்சனிவிரதம்) காலை 09.00 மணிமுதல் |

# Radio - by - Phone

## தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

0221 9888014

01 80140659

044 5133032

0330 332 6349

0787 72527

அழையுங்கள் வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

மேலதீக விபரங்களுக்கு...

www.etr.fm